இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
செவ்வாய்க்கிழமை 18-02-2025

# சமஸ்கிருத மயம் ஆக்குதல்

**மக்களவை நடவடிக்கைகள் சமஸ்கிருத மொழியிலும் உறுப்பினர்களுக்கு விளக்கப்படும் என்று மக்களவைத் தலைவர் ஓம் பிர்லா சொல்லி இருக்கிறார். யாருக்குப் புரியும், எத்தனை பேர் அறிவார்கள் என்பதையும் அவர் சொல்லி இருந்தால் பாராட்டலாம். அதையே சமஸ்கிருதத்தில் சொல்லி இருந்தால் பாராட்டு விழா கூட ஓம் பிர்லாவுக்கு எடுக்கலாம்.**

மக்களவையில் கடந்த பிப்ரவரி 11 ஆம் தேதியன்று கேள்வி நேரம் முடிந்த உடன் மக்களவைத் தலைவர் ஓம் பிர்லா ஒரு அறிவிப்பை வெளியிட்டார். "மக்களவை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது, அதன் மொழி பெயர்ப்புகள் உடனுக்குடன் பல்வேறு மொழிகளில் வழங்கப்பட்டு வருகிறது. அந்த மொழிகளின் பட்டியலில், டோக்ரி, போட்டோ, மைதிலி, மணிப்பூரி, சமஸ்கிருதம், உருது ஆகிய ஆறு மொழிகள் சேர்க்கப்பட்டுள்ளன. இதன்மூலம், இந்த மொழிகள் மூலமும் உறுப்பினர்களுக்கு ஒரே நேரத்தில் விளக்கம் கிடைக்கும்" என தெரிவித்தார். இதற்கு உடனடியாக தி.மு.க. சார்பில் தான் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது.

**மக்களவை மொழிகளின் பட்டியலில் சமஸ்கிருதம் இருப்பதற்கு முன்னாள் அமைச்சரும், தி.மு.க. உறுப்பினருமான தயாநிதி மாறன் கடும் எதிர்ப்பு தெரிவித்தார். இது தொடர்பாக பேசிய அவர், "எந்த மாநிலத்தின் அலுவல் மொழியாக சமஸ்கிருதம் இருக்கிறது என்று சொல்ல முடியுமா? அந்த மொழி தொடர்பு கொள்ள முடியாத நிலையில் உள்ளது. 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, 73,000 பேர் மட்டுமே சமஸ்கிருதம் பேசுகிறார்கள். உங்கள் ஆர்.எஸ்.எஸ். சித்தாந்தத்தால் வரி செலுத்துவோரின் பணத்தை ஏன் வீணடிக்கிறீர்கள்?" என்று கேள்வி எழுப்பினார். இப்படி ஒரு எதிர்வினையை ஓம் பிர்லா எதிர்பார்க்கவில்லை.**

சமஸ்கிருதம் லட்சக்கணக்கானவர்களால் பேசப்படுகிறது என்றோ, இந்த அவையில் இருக்கும் பத்துப் பேருக்கு சமஸ்கிருதம்தான் தெரியும் என்றோ, மூன்று மாநிலங்களில் அது ஆட்சி மொழியாக இருக்கிறது என்றோ ஓம் பிர்லா சொல்லி இருக்க வேண்டும். அதை விட்டு விட்டு கற்பனையான காட்சிகளை விவரிக்கிறார் அவர்.

"நீங்கள் எந்த நாட்டில் வசிக்கிறீர்கள்? இது பாரதம். பாரதத்தின் மூல மொழி எப்போதும் சமஸ்கிருதம்தான். அதனால்தான், சமஸ்கிருதம் மட்டுமல்ல, 22 மொழிகளையும் குறிப்பிட்டோம். சமஸ்கிருதத்திற்கு மட்டும் ஏன் ஆட்சேபனைகளை எழுப்பினீர்கள்? இந்தியாவில் 22 மொழிகள் நாடாளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. சமஸ்கிருதம் மற்றும் இந்தி உட்பட அந்த 22 மொழிகளில் ஏதேனும் ஒன்றில் விவாதங்கள் நடைபெறும்." என்று கூறி இருக்கிறார் ஓம் பிர்லா

**பாரதத்தின் மூல மொழி என்று ஓம் பிர்லா எப்படிச் சொல்கிறார்? எந்த ஆய்வின் அடிப்படையில் சொல்கிறார்? அப்படி உலகம் ஏதாவது ஒப்புக் கொண்டிருக்கிறதா?**

**ஆர்.எஸ்.எஸ்.வாதிகளின் மூலத்தத்துவம் சமஸ்கிருதம் என்று சொல்லுங்கள். ஒப்புக் கொள்கிறோம். இந்திய நாட்டை சமஸ்கிருத மயம் ஆக்கப் போகிறோம் என்று சொல்லுங்கள். உங்கள் நோக்கத்தை வெளிப்படையாக விமர்சிக்கத் தயாராக இருக்கிறோம். ஆனால் பாரத நாட்டின் மூல மொழி சமஸ்கிருதம் என்பது உலகம் ஒப்புக் கொண்ட உண்மை அல்ல.**

**சனாதன சக்திகள் தங்களது நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு சமஸ்கிருதத்தை மூலமாகப் பயன்படுத்துகின்றன. ஜாதியால் வர்ணத்தால் பிரிக்கப்பட்டுள்ளார்கள் மக்கள் என்பதற்கு மூலமாக சமஸ்கிருதம் இருக்கலாம். கோடிக்கணக்கான மக்களை சூத்திரர்களாக, பஞ்சமர்களாக ஆக்கியதற்கு மூலமாக இருப்பது சமஸ்கிருதம்தான். சமூகத்தின் சரி பாதியான பெண்களை உரிமையற்ற பதுமைகளாக ஆக்குவது சமஸ்கிருத சூத்திரங்கள்தான். கடவுளுக்கு உகந்த மொழியாக சமஸ்கிருத்தை உருவகம் செய்து, மற்ற மொழிகளை தாழ்த்தியது இந்த மேலாதிக்கம்தான். எனவே பிரிவினையின் மூலம் 'சமஸ்கிருதம்' என்று சொல்லலாம். இந்தியாவின் மூலமாகச் சொல்ல முடியாது.**

சட்டத்தை சமஸ்கிருதம் ஆக்குவது. திட்டத்தின் பெயரை சமஸ்கிருதம் ஆக்குவது. இதுதான் அவர்களது திட்டம். புதிய கல்விக் கொள்கையே சமஸ்கிருதக் கல்விக் கொள்கைதான்.

> "இந்தியச் செவ்வியல் / செம்மொழிகளின் முக்கியத்துவம், தொடர்பு மற்றும் அழகியல் போன்ற காரணிகள் புறந்தள்ளப் பட்டு விடக் கூடாது. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் எட்டாவது வரைவில் குறிப்பிடப் பட்டுள்ளதும் மற்றுமொரு முக்கியமான நவீன மொழியுமான சமஸ்கிருதம் - ஒன்று கூட்டப்பட்ட கிரேக்க மற்றும் லத்தீன் மொழிகளின் இலக்கியங்களைக் காட்டிலும் செறிவு மிக்கதாகவும், கணிதம், தத்துவம், இலக்கணம், இசை, அரசியல், மருத்துவம், கட்டிடக் கலை, உலோகவியல், நாடகம், கவிதை, கதை சொல்லல் மற்றும் பிற ( சமஸ்கிருத ஞான மரபு என்றறியப் பட்ட) ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக பல்வேறு மதங்களைச் சார்ந்தவர்களாலும், மதச்சார்புடையவர்களாலும் வாழ்வின் பல தரப்பட்ட சமூகப் பொருளாதார மற்றும் வாழ்வியல் முறைகளைச் சார்ந்த எழுத்தாளர்களால் எழுதப்பட்ட ஏராளமான செல்வங்களையும் உள்ளடக்கி உள்ளது.
>
> எனவே சமஸ்கிருதம், மும்மொழிப் பாடத்திட்டத்தின் ஒரு மொழியாகப் பள்ளிக் கல்வித் திட்டத்தின் எல்லா நிலைகளிலும், கல்லூரிகளிலும் ஒரு முக்கியமான வளமூட்டக் கூடிய விருப்பப் பாடமாக வழங்கப்படும்.
>
> இந்த மொழிச் சுவையுடனும், அனுபவப் பூர்வமாகவும் மட்டுமல்லாமல் தற்காலத்திற்குப் பொருந்தும் வகையில் சமஸ்கிருத ஞான மரபுகளின் வழியில் முக்கியமாக ஒலிப்பு மற்றும் உச்சரிப்பு முறைகளின் மூலமாகக் கற்பிக்கப்படும். ஆரம்ப மற்றும் இடைநிலை சமஸ்கிருதப் பாடப் புத்தகங்கள் எளிய தரமான சமஸ்கிருத மொழியில் எழுதப்பட்டு, மாணவர்கள் உண்மையிலேயே அனுபவித்துக் கற்கும் வண்ணம் சமஸ்க்ரித மொழியின் மூலமே கற்பிக்கப்படும்"

என்று புதிய கல்விக் கொள்கையில் இருக்கிறது. இதனால்தான் அந்தக் கொள்கையை நாம் கடுமையாக எதிர்க்கிறோம்.

அவர்கள் புதியக் கல்விக் கொள்கையைத் திணிக்கக் காரணமும் சமஸ்கிருத மேலாண்மையை நிறுவுவதற்குத்தான்.

**இந்தியை ஆட்சி மொழியாக ஆக்குவது ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் நோக்கமல்ல. அவர்களுக்கு சமஸ்கிருதத்தை ஆட்சி மொழி ஆக்குவது தான் இறுதி இலக்கு ஆகும். சமஸ்கிருதம் ஆட்சி மொழி என்றால் அடிக்க வருவார்கள். அதனால் இந்தியை முதலில் சொல்கிறார்கள். இந்தியை உட்கார வைத்து விட்டு சமஸ்கிருதத்தை பின்னர் எடுத்துவரும் தந்திரம்தான் இது.**



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (16.2.2025) சென்னையில் நடைபெற்ற, நாகப்பட்டினம் காவல் கண்காணிப்பாளர் ஆ.கு.அருண் கபிலன் – பிரியங்கா முருகேஷ் ஆகியோரது திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, மரக்கன்று பசுமைக்கூடை வழங்கி மணமக்களை வாழ்த்தினார். உடன் பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் ஆர்.பிரியா மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.

### தமிழ்நாடு அரசின் நெறிமுறைகளை முழுமையாகப் பின்பற்றிட வேண்டும்!

## வரி வசூல் நடவடிக்கைகளில் பாரபட்சம் கூடாது!

### மதுரையில் 11 மாவட்டங்களின் ஆய்வுக் கூட்டத்தில் அமைச்சர் கே.என்.நேரு வலியுறுத்தல்!

*மதுரை, பிப். 18 -*

***வரி வசூல் நடவடிக்கைகளில் தமிழ்நாடு அரசின் வழிகாட்டு நெறிமுறைகளை முழுமையாகப் பின்பற்ற வேண்டும் என்றும், இதில் எந்தவித பாரபட்சமும் கூடாது என்றும் நகராட்சி நிர்வாகம், குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் கே.என். நேரு அறிவுறுத்தினார்.***



மதுரை தமுக்கம் மாநாட்டு மையத்தில் மதுரை, திண்டுக்கல், தேனி, கரூர், ராமநாதபுரம், சிவகங்கை, விருதுநகர், திருநெல்வேலி, தூத்துக்குடி, தென்காசி, கன்னியாகுமரி ஆகிய 11 மாவட்டங்களுக்கு உள்பட்ட மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகளில் செயல்படுத்துப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டப்பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் சனிக்கிழமை நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் அமைச்சர் கே.என்.நேரு பேசியதாவது: -

தமிழகத்தில் 134 நகராட்சிகள், 24 மாநகராட்சிகளில் கடந்த 4 ஆண்டுகளில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம், சீர்மிகு நகரத் திட்டம், மூலதன மானிய நிதி, அம்ருத் 2.0, தூய்மை இந்தியா திட்டம் 2.0, நமக்கு நாமே திட்டம் (நகர்ப்புறம்), நகர்ப்புற சாலை மேம்பாட்டு திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள், ஆசிய வளர்ச்சி வங்கி, உலக வங்கி, ஜெர்மன் வங்கி நிதியுதவி மூலம் மொத்தம் ரூ.29,084 கோடியில் பேருந்து நிலையங்கள், சந்தைகள், அறிவுசார் மையங்கள், சாலைகள், பூங்காக்கள், நீர்நிலை மேம்பாடு, குடிநீர் வசதி, புதை சாக்கடை வசதி போன்ற பல உள்கட்டமைப்பு பணிகள் அனுமதிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன.

மாநிலம் முழுவதும் கடந்தாண்டு 5.50 லட்சம் எல்.இ.டி. தெரு மின் விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும், விடுப்பட்ட பகுதிகளில் அமைப்பதற்கு கூடுதலாக 1.50 லட்சம் எல்.இ.டி.விளக்குகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த 3 ஆண்டுகளில் திண்டுக்கல் மாவட்ட குடிநீர்த் திட்டத்துக்கு ரூ.1446.12 கோடி, கரூர் மாவட்டத்துக்கு ரூ.522.04 கோடி, மதுரை மாவட்டத்துக்கு ரூ.2008.70 கோடி, விருதுநகர் மாவட்டத்துக்கு ரூ.2027.40 கோடி, தேனி மாவட்டத்துக்கு ரூ.780.89 கோடி, சிவகங்கை மாவட்டத்துக்கு ரூ.1952.73 கோடி, ராமநாதபுரம் மாவட்டத்துக்கு ரூ.3,289.28 கோடி, திருநெல்வேலி மாவட்டத்துக்கு ரூ.1450.22 கோடி, தென்காசி மாவட்டத்துக்கு ரூ.226.59 கோடி, தூத்துக்குடி மாவட்டத்துக்கு ரூ.572.54 கோடி, கன்னியாகுமரி மாவட்டத்துக்கு ரூ.508.22 கோடி, புதை சாக்கடை திட்டத்துக்கு விருதுநகர் மாவட்டத்துக்கு ரூ.596.84 கோடி, தேனி மாவட்டத்துக்கு ரூ.41.72 கோடி, சிவகங்கை மாவட்டத்துக்கு ரூ.140.13 கோடி, ராமநாதபுரம் மாவட்டத்துக்கு ரூ.52.60 கோடி, தூத்துக்குடி மாவட்டத்துக்கு ரூ.368.52 கோடி, கன்னியாகுமரி மாவட்டத்துக்கு ரூ.129.95 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

நகராட்சி நிர்வாகத் துறையின் மூலம் வளர்ச்சித் திட்டப் பணிகளை மேற்கொள்வதற்காக ஆண்டுதோறும் ரூ. 24 ஆயிரம் கோடி நிதியை தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் ஒதுக்கீடு செய்து வருகிறார்.

எனவே, திட்டப் பணிகளை ஆணையர்கள், செயல் அலுவலர்கள், அனைத்து அலுவலர்களும் ஒருங்கிணைந்து செயல்பட்டு, விரைவில் பொதுமக்கள் பயன்பாட்டுக்கு கொண்டு வர வேண்டும். வரி வசூல் தொடர்பாக சில குற்றச்சாட்டுகள் எழுகின்றன.

வரி வசூல் தொடர்பான நடவடிக்கைகளில் தமிழக அரசின் வழிகாட்டு நெறிமுறைகளை முழுமையாகப் பின்பற்ற வேண்டும். இதில், எந்தவித பாரபட்சமும் கூடாது.

இவ்வாறு அமைச்சர் கே.என்.நேரு வலியுறுத்தினார்.

கூட்டத்தில் அமைச்சர்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், தங்கம் தென்னரசு, கீதாஜீவன், அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், அர.சக்கரபாணி, வி.செந்தில்பாலாஜி, பி.மூர்த்தி, மக்களவை உறுப்பினர்கள் கனிமொழி (தூத்துக்குடி), சு.வெங்கடேசன் (மதுரை), தங்கதமிழ்ச்செல்வன் (தேனி), ராணி ஸ்ரீகுமார் (தென்காசி), ராபர்ட் புரூஸ் (திருநெல்வேலி), முதன்மைச் செயலர் கார்த்திகேயன், நகராட்சி நிர்வாக இயக்குநர் சிவராசு, மேயர் வ. இந்திராணி, மாவட்ட ஆட்சியர் மா.சௌ. சங்கீதா, மாநகராட்சி ஆணையர் சித்ரா விஜயன், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர் கிரண்குராலா, 11 மாவட்டங்களைச் சேர்ந்த சட்டப் பேரவை உறுப்பினர்கள், மேயர்கள், ஆணையர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் – வரும் 28ஆம் தேதி அன்று திறந்து வைக்கவுள்ள

## பெரியார் நகர் அரசு புறநகர் மருத்துவமனை!

### அமைச்சர்கள் எ.வ.வேலு – பி.கே.சேகர்பாபு நேரில் ஆய்வு!





*சென்னை, பிப்.18 -*

வரும் 28-ஆம் தேதி மக்கள் பயன்பாட்டிற்கு வரவுள்ள பெரியார் நகர் அரசு புறநகர் மருத்துவமனையை பொதுப்பணி மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் எ.வ.வேலு மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சேகர்பாபு ஆகியோர் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர்.

பெரியார் நகர் அரசு மருத்துவமனையில் ரூ.109 கோடியே 89 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தரை மற்றும் 6 தளங்களுடன் கட்டப்பட்டுள்ள புதிய கட்டிடத்தை பிப்ரவரி 28-ஆம் தேதி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைக்கிறார்.

சென்னை கொளத்தூர் பெரியார் நகர் அரசு புறநகர் மருத்துவமனை 1986-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. மருத்துவமனையில் முழு உடல் பரிசோதனை, விபத்து காய சிகிச்சைப் பிரிவு, தொற்றா நோய் பிரிவு, டயாலிசிஸ், ரத்த வங்கி போன்ற சேவைகள் வழங்கும் வகையில், உலக வங்கி திட்டத்தின் கீழ் ரூ.71.81 கோடியில் 3 தளங்களுடன் கூடிய கூடுதல் கட்டிடம் மற்றும் மருத்துவ உபகரணங்கள் அமைக்கும் பணி கடந்த 2023-ஆம் ஆண்டு மார்ச் 8-ஆம் தேதி முதல்வரால் அடிக்கல் நாட்டப்பட்டது.

அதன் தொடர்ச்சியாக மேலும் பல உயர்சிறப்பு மருத்துவ சிகிச்சைகள் மற்றும் பிரத்யேக இருதயவியல் சிகிச்சை பிரிவு ஆகியவற்றை உள்ளடக்கிய 6 தளங்களாக விரிவாக்கம் செய்யப்பட்டு ரூ.54.82 கோடியில் கடந்த 2024-ஆம் ஆண்டு மார்ச் 7-ஆம் தேதி முதல்வரால் ஆணையிடப்பட்டு கட்டுமான பணிகள் இறுதிக்கட்டத்தை எட்டியுள்ள நிலையில் வரும் 28-ஆம் தேதி தமிழ்நாடு முதலமைச்சர் திறந்து வைக்கிறார்.

இந்த நிலையில், கட்டுமான பணிகளின் நிலை குறித்து அமைச்சர்கள் எ.வ.வேலு, சேகர்பாபு ஆகியோர் நேரில் ஆய்வு மேற்கொண்டதோடு அதிகாரிகளிடம் பணிகளின் நிலை தொடர்பாகவும் கேட்டறிந்தனர். அப்போது பணிகளை ஒரு வாரத்திற்குள் விரைந்து முடிக்க வேண்டும் எனவும், பொதுமக்களுக்கு சிறப்பான முறையில் மருத்துவமனையை கொண்டு வரும் வகையில் பணிகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் அறிவுறுத்தினார்கள்.

இந்த ஆய்வின்போது அரசு செயலாளர்கள் ஜெயகாந்தன், வினித், தம்புராஜ், செந்தில், மேயர் பிரியா, முதன்மை தலைமை பொறியாளர் மணிவண்ணன், தலைமை பொறியாளர் மணிகண்டன், கண்காணிப்பு பொறியாளர் முத்தமிழரசன், பொதுப்பணித்துறை, மருத்துவத் துறை அதிகாரிகள் மற்றும் மருத்துவர்களும் உடனிருந்தனர்.

### எடமச்சி - பொற்பந்தலில் நெல் கொள்முதல் நிலையம் அமைக்கும் பணி க.சுந்தர் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்!

*காஞ்சிபுரம், பிப். 18-*

காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் ஒன்றியம், சால வாக்கம் அடுத்த எடமச்சி, பொற்பந்தல் ஆகிய ஊராட்சி களின் மையப் பகுதியில் ரூபாய் 30 லட்சம் மதிப்பில் நெல் கொள்முதல் நிலையத்திற்கான நெற்களம் மற்றும் தானி யக்கிடங்கு கட்டுவதற்கு அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது.

அதில் காஞ்சிபுரம் தெற்கு மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. சிறப்பு அடிக்கல் நாட்டினார்.

இதில் ஒன்றியச் செயலாளர்கள் டி.குமார், பி.சேகர், மாவட்ட கவுன்சிலர் சிவராமன், அறங்காவலர் குழு உறுப்பினர் வெங்கடேசன், ஊராட்சி மன்ற தலைவர்கள் தர்மராஜ், கார்த்தி, ஒன்றிய கவுன்சிலர் பி.சுப்பிரமணி, முரளி, ஒன்றிய நிர்வாகிகள் பால முருகன், அழகப்பன், நந்தா மற்றும் பாஸ்கர் உள்ளிட்ட துணைத் தலைவர்கள், மன்ற உறுப்பினர்கள் கிராம பொதுமக்கள் கலந்து கொண்டனர்.




திருச்சியில் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு திருச்சி மலபார் கோல்ட் அண்ட் டைமண்ட் ஷோரூம் சார்பில் ப்ரீஸ் ஹோட்டலில் நடைபெற்ற விழாவில் ரூபாய் 11 லட்சம் அளவிற்கு, சுமார் 127 பள்ளி மாணவ, மாணவிகளுக்கு கல்வி உதவித்தொகை வழங்கினார். இதில் மத்திய மாவட்டச் செயலாளர் வைரமணி, மலபார் கோல்ட் அண்ட் டைமண்ட் திருச்சி கிளைத் தலைவர் ஜோசப் பிளஸ், வர்த்தக மேலாளர் திவாகர், சேர்மன் துரைராஜ், டோல்கேட் சுப்பிரமணி, கதிர்வேல், கவுன்சிலர் கலைச்செல்வி, மோகன் தாஸ் உட்பட பலர் கலந்து கொண்டனர்.